# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப., (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண். 67/மா/2022**

**நாள் : 02.08.2022**

திரு. P. கனகாசலம்,
கோயம்புத்தூர் - 641 025. – முறையீட்டு மனுதாரர்

உதவி ஆணையாளர்,
மேற்கு மண்டலம்,
கோயம்புத்தூர் மாநகராட்சி. – எதிர்மனுதாரர்

கோயம்புத்தூர் மாவட்டம், இடையர்பாளையம் P.O., T.V.S. நகர், ஸ்ரீ முருகன் காலனி, எண்.75 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. P. கனகாசலம் என்பவரின் 7.5.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 16.05.2022-ல் பெறப்பட்டு 67/மா/2022 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**<u>ஆணை</u>**

கோயம்புத்தூர் மாவட்டம், இடையர்பாளையம் P.O., T.V.S. நகர், ஸ்ரீ முருகன் காலனி, எண்.75 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. P. கனகாசலம் என்பவர் தனது முறையீட்டு மனுவில்:

> "கோயம்புத்தூர் மாநகராட்சி பழைய வார்டு 6 (புதிய வார்டு 16) கவுண்டம்பாளையம் கிராமம் சர்வே எண்.403/2A, 1B, 3 காலை லே-அவுட் ஸ்ரீ முருகன் காலனி, T.V.S. நகர் என்ற விலாசத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட நபர்கள் வீடுகள் கட்டி குடியிருந்து வருகின்றோம். இக்குடியிருப்புகள் 1963-ஆம் வருடத்திலிருந்து இருக்கின்றன. சிறு, நடுத்தர குடும்பத்தினர் மட்டுமே உள்ளனர். இது (Residential Area) குடியிருப்புக்கு என ஒதுக்கப்பட்ட பகுதி; அரசினால் அங்கீகரிக்கப்பட்டது. இதனை ஒட்டி கச 402 நஞ்சுக்குட்டி கவுண்டர் குடியிருப்பு பகுதியில் 20க்கும் மேற்பட்ட சிறு தொழிற்சாலைகளுக்கு கட்டடங்களை வாடகைக்கு விட்டுள்ளனர். அதில் M/s. கங்கா ஆஸ்பெஸ்டாஸ், M/s. துர்கா பேக்ஸ் இரு தொழிற்சாலைகளும் (Packing

Rope) இரசாயன கழிவு பஞ்சுகளை கொண்டு தயாரிக்கப்படும் தொழிற்சாலைகளாகும். இது தவிர லேத், மெஷின் டூல்ஸ், பேப்ரிகேஷன் மெட்டலர்ஜிகள், அஸ்பெஸ்டாஸ், பவுண்ரிகள், மரப்பலகை தயாரிப்பு தொழிற்சாலைகள் என இருபதிற்கும் மேற்பட்டுள்ளன. மேற்கண்ட தொழிற்சாலைகள் இரவும் பகலும் ஓடுவதினால் இரைச்சலும், கழிவு பஞ்சு துகள்களினால் மூச்சு முட்டலும் இரசாயன கழிவு நாற்றமும் ஏற்படுகின்றன.

இது சம்பந்தமாக பதினைந்து ஆண்டுகளாக மேற்கண்ட தொழிற்சாலைகளை குடியிருப்புக்கு என ஒதுக்கப்பட்ட பகுதியிலிருந்து அப்புறப்படுத்தக் கோரி நகராட்சி, மாநகராட்சி, மாசு கட்டுப்பாட்டு வாரியம் என புகார் கொடுத்தும், அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டிய கோவை மாநகராட்சி மேற்கு மண்டல உதவி ஆணையர் சுகாதார ஆய்வாளர், மேற்பார்வையாளர் எவ்வித நடவடிக்கைகளும் எடுப்பதில்லை. தொழிற்சாலைகளிலிருந்து பிரதிபலன் பெற்றுக்கொண்டு நடவடிக்கை எடுப்பதில்லை என்பதாக தெரியவருகிறது.

மாநகராட்சி 19.11.2020, 10.12.2020 ஆகிய தேதிகளில் நோட்டீஸ் வழங்கப்பட்டுள்ளது என 14.12.2020 தேதியிட்ட கடிதத்தில் தெரிவித்துள்ளனர். பதினெட்டு மாதங்களை கடந்தும் எவ்வித நடவடிக்கையும் இல்லை. கட்டடங்கள் கட்ட மாநகராட்சி அனுமதி ஏதும் பெறாமல் பத்துக்கும் மேற்பட்ட கட்டடங்கள் கட்டி வாடகைக்கு விட்டுள்ளனர். வரிவிதிப்புகள் ஏதும் விதிக்கப்படவில்லை என தெரியவருகிறது. இதனால் அரசுக்கு பல லட்சக் கணக்கான ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளது.

மேலும் கடந்த 8.12.2021ல் பொதுப் பாதையை ஆக்கிரமிப்பு செய்தும், கழிவு நீர் செல்லும் கால்வாய் மற்றும் பாலம் (culvert) சேதப்படுத்தியது குறித்து பொதுமக்கள் புகார் மனுவின் மீதும் எவ்வித நடவடிக்கைகளும் இல்லை. ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டுவிட்டது என்றும் விதிமீறி கட்டப்பட்டுவரும் கட்டடத்திற்கு நிறுத்திவைக்க 4.01.2022ல் அறிவிப்பும் 22.12.2021–ல் ஒரு அறிவிப்பும் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

பொதுப்பாதை ஆக்கிரமிப்பினை முழுமையாக அகற்றாமல் அகற்றி விட்டதாகவும், கட்டட அனுமதிக்கு மாறாக கட்டப்பட்டு வரும் கட்டடத்திற்கு பெயரளவில் அறிவிப்பு கொடுத்துள்ளனர். இதுவும் விதிமீறி கட்டடம் கட்ட உறுதுணையாக உள்ள கோவை மாநகராட்சி நகரமைப்பு பிரிவு அலுவலர்கள், கல்வெர்ட் சேதப்படுத்தியதன் மீது நடவடிக்கை எடுக்காத பொறியாளர்கள், மேற்பார்வையாளர்கள் பதினைந்து ஆண்டுகளாக சுகாதாரமற்ற நிலையை உருவாக்கிய சுகாதார அலுவலர், சுகாதார ஆய்வாளர் மேற்பார்வை பணி செய்வோர் ஆகிய அனைத்து அலுவலர்கள் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன். குடியிருப்பு பகுதியில் தொழிற்சாலைகள் இயங்க உறுதுணையாக உள்ள சுகாதாரத் துறை அலுவலர்கள் பொதுப் பாதையினை ஆக்கிரமிப்பு செய்ததையும் கல்வெர்ட் (சிறுபாலம்) சேதப்படுத்தியதையும் பார்த்துக் கொண்டு உறுதுணையாக உள்ள பொறியாளர், மேற்பார்வையாளர்கள் மீது நடவடிக்கை எடுக்கவும், குடியிருப்புப் பகுதியில் மாசு ஏற்படுத்துகின்ற தொழிற்சாலைகள் மீது நடவடிக்கை எடுக்கவும் பொதுப்பாதையினை ஆக்கிரமிப்பு செய்தும் கழிவுநீர் கால்வாயின் மீது கட்டப்பட்ட

சிறுபாலத்தை சேதப்படுத்தி விதிமீறி கட்டப்பட்டுவரும் கட்டடங்களை **அகற்றவும்** நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

**மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு, கோயம்புத்தூர் மாநகராட்சி, மேற்கு மண்டலம், உதவி ஆணையரிடம் கோரப்பட்டது. அவர், தனது 15.6.2022 நாளிட்ட அறிக்கையில்,**

"கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்.34, **சவுடாம்பிகா** நகரில் செயல்பட்டுவந்த சதீஸ் இன்டஸ்டிரீஸ் மற்றும் சுரேஷ் இன்டஸ்டிரீஸ் **தொழில் கூடத்தால்** ஒலி, காற்று மாசு ஏற்படுவதாகவும், இரவு நேரத்தில் இயக்கப்படுவதால் தூங்க **முடியவில்லை என** கடந்த 6 மாதங்களுக்கு முன் பொதுமக்களிடமிருந்து புகார் பெறப்பட்டது. **இது குறித்து** மாநகராட்சி சுகாதார அலுவலர்களால் நேராய்வு செய்யப்பட்டு மேற்படி **நிறுவனத்தினருக்கு** அறிவிப்பு வழங்கப்பட்டது.

மேலும் மாநகராட்சி ஆணையாளருக்கு இது குறித்து பொதுமக்களிடமிருந்து புகார் வரப்பெற்றது. மாவட்ட தொழில் மையம் (DIC), மாசு கட்டுப்பாட்டு வாரியம் மற்றும் மாநகராட்சியால் நேரில் ஆய்வு செய்யப்பட்டு சம்பந்தப்பட்ட வார்டு சுகாதார ஆய்வாளர் மற்றும் மண்டல சுகாதார அலுவலரால் மேற்படி தொழிற்சாலைகள் மூடப்பட்டன. இது சம்பந்தமாக 2022 மே மாதம் 25-ம் தேதி அன்று தினமலர், தினமணி, தினத்தந்தி ஆகிய தமிழ் நாளிதழ்களிலும் இந்து தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்ல்களிலும் செய்திகள் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

மேற்படி நிறுவனத்தினர் இது குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் புகார் அளித்ததைத் தொடர்ந்து, மேற்படி இடத்தை ஆய்வு செய்து அறிக்கை அளிக்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் உத்தரவிடப்பட்டது. அதனடிப்படையில் ஆய்வு மேற்கொண்டு மேற்படி தொழில் நிறுவன உரிமையாளர்கள் மற்றும் சங்க பிரதிநிதிகள், பொது மக்கள் மற்றும் அலுவலர்கள் முன்னிலையில் தொழில் நிறுவனங்களை 3 மாத காலத்திற்குள் காலி செய்துகொள்வதாக சம்பந்தப்பட்ட தொழில் நிறுவனத்தினர் ஒப்பந்த கடிதம் அளித்துள்ளனர். மேற்கண்ட தொழில் நிறுவனங்கள் விரைவில் காலி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இது போன்று குடியிருப்புப் பகுதிகளில் தொழிற்சாலைகள் குறித்த புகார் வரப்பெற்றால் உடனடியாக அறிவிப்பு சார்வு செய்து காலி செய்ய தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. பி. கனகாசலம் என்பவரின் புகார் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள 4 தொழிற்சாலைகளில் சாய்பாபா இண்டஸ்டிரிஸ் மற்றும் துர்கா பேக்ஸ் ஆகிய 2 நிறுவனங்கள் மூடப்பட்டு, தற்போது இயக்கப்படுவதில்லை; மற்ற இரண்டு நிறுவனங்களான கங்கா ஆஸ்பெஸ்டாஸ், ஹரி இன்ஜினியரிங் ஆகிய நிறுவனங்களை, மாவட்ட தொழில் மையம் (DIC), மாசு கட்டுப்பாட்டு வாரியம் மற்றும் மாநகராட்சியால் ஆய்வு மேற்கொண்டு விரைவில் மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்ற தகவல் தங்களின் மேலான பார்வைக்கு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

**3) மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோர் இம்முறைமன்ற நடுவ அழைப்பாணைகள் மூலம் 15.06.2022 அன்று நேரடி விசாரணைக்கு அழைக்கப்பட்டனர்.**

**15.06.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகிய கோயம்புத்தூர் மேற்கு மண்டல உதவி ஆணையர், தனது வாக்குமூலத்தில்,**

"மனுதாரர் குறிப்பிட்டுள்ள கோயம்புத்தூர் கவுண்டம்பாளையம் கிராமம் புல எண்.402ல் கங்கா ஆஸ்பெஸ்டாஸ், சாய்பாபா இண்டஸ்ட்ரீஸ், துர்கா பேக் மற்றும் ஹரி என்ஜீனியரிங் ஆகிய தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன. இவை கடந்த பத்து ஆண்டுகளுக்கு மேலாக இயங்கி வருகின்றன. மேற்கண்ட கட்டடங்களுக்கு சொத்து வரி குடியிருப்பு முறையில் வரி விதிப்பு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட நிறுவனங்கள் உள்ளாட்சி அமைப்பிடம் உரிய அங்கீகாரம் / அனுமதி பெறாததால், அந்நிறுவனங்கள் மீது தொடர் நடவடிக்கை எடுக்க ஏதுவாக 9.11.2020 மற்றும் 10.12.2020 ஆகிய நாட்களில் நோட்டீஸ் வழங்கப்பட்டுள்ளது. மேலும், மேற்கண்ட 4 நிறுவனங்களில் சாய்பாபா இண்டஸ்ட்ரீஸ் (Sai Baba Industries) மற்றும் துர்கா பேக்ஸ் (M/s. Durga Packs) ஆகிய 2 நிறுவனங்கள் கடந்த ஒரு வருடத்திற்கு முன்பு மூடப்பட்டன. மற்ற இரண்டு சிறு தொழிற்சாலைகள் தற்போதும் இயங்கி வருகின்றன என்கின்ற விவரத்தையும் உரிய அனுமதி பெறாத மேற்கண்ட இரண்டு நிறுவனங்களின் மீது உரிய நடவடிக்கை எடுத்து விரைவில் மூடப்படும் என்பதையும் இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்நேர்வு தொடர்பாக எனது 14.6.2022 நாளிட்ட கடிதத்தையும் எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்." எனத் தெரிவித்துள்ளார்.

**மனுதாரர் 15.06.2022 அன்று நடைபெற்ற நேரடி விசாரணைக்கு ஆஜராகவில்லை. மீண்டும் 19.07.2022 அன்றைய நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு அழைக்கப்பட்டார். 19.7.2022 அன்றைய விசாரணைக்கு ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:**

"கோயம்புத்தூர் மாநகராட்சி இடையார்பாளையம் அஞ்சல் T.V.S. நகர் ஸ்ரீமுருகன் காலனியில் எங்களது குடியிருப்புகள் அமைந்துள்ளன. குடியிருப்புக்கென ஒதுக்கப்பட்ட எங்களது பகுதியையொட்டிய நஞ்சுக்குட்டி கவுண்டர் குடியிருப்புப் பகுதியில் சிறு தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன. மேற்கண்ட தொழிற்சாலைகளில் இரசாயன கழிவு பஞ்சுகளைக்கொண்டு Packing Rope தயாரிக்கப்படுகிறது. அதைத் தவிர மற்ற தொழிற்சாலைகள் மரப்பலகை தயாரிப்பு, பேப்ரிகேஷன், ஆஸ்பெஸ்டாஸ் ஷீட் போன்ற பொருட்களை தயாரித்து வருகின்றன. மேற்கண்ட இரசாயன பஞ்சுகளின் கழிவுகளினாலும், ஆஸ்பெஸ்டாஸ் துகள்களினாலும் எங்களது குடியிருப்பில் வசித்து வரும் மக்கள் நுரையீரல் புற்றுநோய் போன்ற பல்வேறு சுகாதார சீர்கேட்டினால் அவதிப்பட்டு வருகின்றனர். அதனால் பெரியோர், பெண்கள் மற்றும் சிறு குழந்தைகள் வரை அனைவரும் மேற்கண்ட தொழிற்சாலைகளிலிருந்து வரும் கழிவுகளினால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனால், அப்பகுதியில் வசிக்கும் எங்களது வாழ்வாதாரம் கேள்விக்குறியாக உள்ளது.

மேற்கண்ட இடத்தில் இயங்கி வரும் Ganga Asbestos, Sai baba Industries, Durga Packs and Hari Engineering போன்ற தொழிற்சாலைகள் இயங்குவதை நிறுத்தவேண்டி கோயம்புத்தூர் மாநகராட்சி, மாவட்ட ஆட்சியர் மற்றும் மாசு

கட்டுப்பாட்டு வாரியம் ஆகியவற்றில் கடந்த 1996–ஆம் ஆண்டிலிருந்து **மனுக்கள்** மேல் மனுக்கள் அனுப்பியும் மேற்கண்ட பிரச்சனை குறித்து **தீர்வு ஏதும்** கிடைக்காததால், நான் இம்முறைமன்றத்தை நாடியுள்ளேன்.

மேலும் நாங்கள் வசித்து வரும் குடியிருப்புப் பகுதியில் **பொதுப்பாதையை** ஆக்கிரமிப்பு செய்தும் கழிவு நீர் செல்லும் கால்வாய் மற்றும் **பாலத்தை சமூக** விரோதிகள் சேதப்படுத்தியது குறித்து கோயம்புத்தூர் மாநகராட்சியில் **புகார்கள்** அனுப்பியும், அப்புகார்களின் மீது மாநகராட்சியால் எவ்வித **நடவடிக்கையும்** எடுக்கப்படவில்லை.

எனவே, எங்கள் பகுதியில் சுகாதார கேடு விளைவிக்கும் **மேற்கண்ட 4** தொழிற்சாலைகள் உட்பட இரசாயனக் கழிவுகளை வெளியேற்றும் **தொழிற்சாலைகள்** அனைத்தையும் மூடவும், அப்பகுதியில் வசிக்கும் எங்களது சுகாதாரத்தை பேணிக் காத்திடவும், மேலும் பொதுப்பாதை ஆக்கிரமிப்பு மற்றும் சேதப்படுத்தப்பட்ட கால்வாய் மற்றும் பாலத்தை சீர் செய்திடவும், மேலும் மேற்கண்ட புகார்களின் மீது உரிய நேரத்தில் நடவடிக்கை எடுக்கத் தவறிய மாநகராட்சி அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுத்திடவும் ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் எனது 7.5.2022 நாளிட்ட மனுவில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

முறையீட்டு மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலம் மற்றும் உதவி ஆணையாளரின் அறிக்கை மற்றும் அவரது வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன :

மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலத்திலிருந்து, கோயம்புத்தூர் மாவட்டம், இடையர்பாளையம் P.O., T.V.S. நகர், ஸ்ரீ முருகன் காலனி, எண்.75 என்ற முகவரியில் வசிக்கும் மனுதாரர் திரு. P. கனகாசலம், T.V.S. நகர் என்ற பகுதியில், 1963-ஆம் ஆண்டிலிருந்து நூற்றுக்கும் மேற்பட்ட குடியிருப்புகள் உள்ளன என்பதும், மேலும், அப்பகுதிக்கு அருகில் நஞ்சுக்குட்டி கவுண்டர் என்ற குடியிருப்பு பகுதியில் மாநகராட்சியிடம் கட்டட அனுமதி பெறாமல் கட்டப்பட்டுள்ள கட்டடங்களில், 20-க்கும் மேற்பட்ட சிறு தொழிற்சாலைகள் உள்ளதும் தெரிய வருகிறது. குறிப்பாக, M/s.கங்கா ஆஸ்பெஸ்டாஸ் மற்றும் M/s.துர்கா பேக்ஸ் ஆகிய இரு தொழிற்சாலைகளும் இரசாயன கழிவு பஞ்சுகளைக் கொண்டு தயாரிக்கப்படும் தொழிற்சாலைகள்; அவை இரவும் பகலும் இயங்குவதால் இரைச்சலும் மற்றும் ஆஸ்பெஸ்டாஸ் துகள்கள் மூலம் சுவாச பிரச்சினைகள் ஏற்படுவதுடன், நுரையீரல் புற்றுநோய் போன்ற கொடிய நோய்கள் ஏற்பட வாய்ப்புள்ளதையும், இது குறித்து கோயம்புத்தூர் மாநகராட்சி, மாவட்ட ஆட்சியர் மற்றும் மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் ஆகியோரிடம் 1996-ஆம் ஆண்டிலிருந்து பலமுறை புகார் மனுக்கள் அளித்தும் உரிய நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளாததால் உரிய நிவாரணம் கிடைக்க இம்முறைமன்றத்தை நாடியுள்ளதையும் அறிய முடிகிறது. மேலும், கழிவுநீர் கால்வாய் மற்றும் பொதுப்பாதையை ஆக்கிரமிப்பு செய்துள்ளதும் தெரிய வருகிறது.

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டல உதவி ஆணையரின் அறிக்கை மற்றும் வாக்குமூலத்திலிருந்து மனுதாரர் குறிப்பிடும் குடியிருப்புப் பகுதியில், கங்கா ஆஸ்பெஸ்டாஸ், சாய்பாபா இண்டஸ்ட்ரீஸ், துர்கா பேக், ஹரி இன்ஜினியரிங் ஆகிய 4 தொழிற்சாலைகள் பத்து ஆண்டுகளுக்கும் மேலாக இயங்கி வருகின்றன என்பதும், தொழிற்சாலைகள் இயங்கும் கட்டடங்களுக்கு குடியிருப்பு முறையில் வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளது என்பதையும்

அறியமுடிகிறது. மேலும், அந்நிறுவனங்கள் உள்ளாட்சி அமைப்பிடம் உரிய அங்கீகாரம்/அனுமதி பெறாததால், அந்நிறுவனங்கள் மீது தொடர் நடவடிக்கை எடுக்க ஏதுவாக 9.11.2020 மற்றும் 10.12.2020 தேதியிட்ட கடிதங்கள் வாயிலாக கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டம், 1981-ன் பிரிவுகள் 282, 282 (3), 296(1), (2) (3) மற்றும் 360-ன் கீழும், தமிழ்நாடு மக்கள் நலவாழ்வுச் சட்டம், 1939-ன் பிரிவுகள் 41(1), 44 மற்றும் 134-ன் கீழும் நோட்டீஸ் வழங்கப்பட்டுள்ளது தெரியவருகிறது. மேற்குறிப்பிட்ட நான்கு நிறுவனங்களில் சாய்பாபா இண்டஸ்ட்ரீஸ் மற்றும் துர்கா பேக்ஸ் ஆகிய இரண்டு நிறுவனங்கள் கடந்த ஒரு ஆண்டிற்கு முன்னால் மூடப்பட்டுள்ளதும், மற்ற இரண்டு சிறு தொழிற்சாலைகள் தற்பொழுதும் இயங்கி வருவதும் தெரியவருகிறது. உரிய அனுமதி பெறாத இரண்டு நிறுவனங்கள் மீதும் உரிய நடவடிக்கை மேற்கொண்டு விரைவில் மூடப்படும் என்று மேற்கு மண்டல உதவி ஆணையரின் வாக்குமூலத்தின்படி தெரிய வருகிறது. மேலும், நடைபெற்ற நிகழ்வுகள் வரிசைக் கிரமமாக கீழே கொடுக்கப்படுகிறது :-

- மனுதாரார் திரு. P. கனகாசலம் 1996-ஆம் ஆண்டிலிருந்து அவரது மனுவில் குறிப்பிட்டுள்ள தொழிற்சாலைகளினால் ஏற்படும் நுரையீரல் புற்றுநோய் போன்ற சுகாதார சீர்கேடுகள் குறித்தும், இரைச்சலினால் ஏற்படும் தொந்தரவுகள் குறித்தும் பல புகார் மனுக்களை கோயம்புத்தூர் மாநகராட்சி, மாவட்ட ஆட்சியர் மற்றும் மாசு கட்டுப்பாட்டு வாரியம் ஆகிய அரசு அமைப்புகளுக்கு புகார் கொடுத்தும் எவ்வித பலனும் ஏற்படவில்லை என தெரிவித்துள்ளது, பொது மக்களின் அடிப்படைத் தேவைகளில் கோயம்புத்தூர் மாநகராட்சி அலுவலர்கள் உரிய கவனம் செலுத்தவில்லை என்பதையே காட்டுகிறது.
- 16.11.2020 (ம) 17.11.2020 தேதியிட்ட கடிதங்கள் வாயிலாக கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டம் 1981-ன் பிரிவுகள் 296 (1) மற்றும் 296 (2)–ன் கீழ் அறிவிப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. மேலும், அச்சட்டத்தின் பிரிவுகள் 282, 282 (3) மற்றும் 296 (3) கீழும் அறிவிப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. 10.12.2020 தேதியிட்ட கடிதம் வாயிலாக தமிழ்நாடு மக்கள் நலவாழ்வு சட்டம் 1939-ன் பிரிவுகள் 41 (1), 44 மற்றும் 134-ன் கீழும், கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டம் 1981-ன் பிரிவு 360-ன் படியும் நான்கு நிறுவனங்களுக்கும் அறிவிப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. மேலும், தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம், 1971-ன் பிரிவு 56 (2A)-ன்கீழ் அத்தொழிற்சாலைகளைப் பூட்டி சீல் வைப்பதற்கான நோட்டீசும் கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையரால் கொடுக்கப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்டுள்ள சட்டப் பிரிவுகளின் கீழ் அறிவிப்புகள் கொடுக்கப்பட்டதில், இரண்டு நிறுவனங்கள் ஒரு வருடத்திற்கு முன்பு மூடப்பட்டதாகவும், மற்ற இரு நிறுவனங்கள் தற்போதுவரை இயங்கி வருவதாகவும், அவற்றை மூட தொடர் நடவடிக்கை மேற்கொள்வதாகவும், கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டல உதவி ஆணையர் தெரிவித்துள்ளது அவரது பணியில் தொய்வு மற்றும் அலட்சியப் போக்கையே காட்டுகிறது. 10.12.2020-க்குப் பின்னர் அவ்விரு நிறுவனங்களை மூட எந்தவொரு நடவடிக்கையும் அவர் எடுக்கவில்லை என்பதை தெள்ளத்தெளிவாக அறியமுடிகிறது.
- ஆனால், மனுதாரர், விசாரணையின் போது மூடப்பட்டதாக கூறப்படும் அவ்விரு நிறுவனங்கள் வெவ்வேறு பெயர்களில் இயங்குவதாகவும் அல்லது பெயர்ப்பலகையே இல்லாமல் இயங்குகின்றன எனவும் தெரிவித்துள்ளது, தொழிற்சாலைகளின் இச்செயலை மாநகராட்சிக்கு சுட்டிக் காட்டியும், மனுதாரர் குறிப்பிட்ட தொழிற்சாலைகளுக்கு நோட்டீசும் கொடுத்ததற்குப் பின்னர் சம்பந்தப்பட்ட மாநகராட்சி அலுவலர்கள் தொடர் நடவடிக்கையை சரியாக எடுக்கவில்லை என்பதையே இந்நிகழ்வுகள் காட்டுகின்றன.
- மேலும், குடியிருப்புப் பகுதியில் மாநகராட்சியின் அனுமதி பெறாமல் உள்ள கட்டடங்களில் இயங்கி வரும் தொழிற்சாலைகளுக்கு குடியிருப்புப் பகுதியில் விதிக்கப்படும் சொத்துவரியே விதிக்கப்பட்டு வசூலிக்கப்பட்டு வருகிறது என்பது மாநகராட்சி பதிவேடுகளின் நகல்களின்

மூலமும், மேற்கு மண்டல உதவி ஆணையரின் வாக்குமூலத்திலிருந்தும் தெரியவருகிறது. இதனால், மாநகராட்சிக்கு பெரும் வருவாய் இழப்பு ஏற்படுகிறது என்பதை மனுதாரர் சுட்டிக்காட்டியும் மேற்கு மண்டல உதவி ஆணையர் சொத்து வரியைத் தவறாக மதிப்பீடு செய்த வருவாய் அலுவலர்களிடம் எவ்வித விளக்கமும் கேட்காமல் இருப்பதும், நடவடிக்கை எடுக்காததும் அவரது செயல்பாட்டினை சந்தேகத்திற்குள்ளாக்குகிறது.

- மேலும், மனுதாரர் திரு. P. கனகாசலம் அனுப்பிய மனு மீது, தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் கோயம்புத்தூர் மாவட்ட சுற்றுச் சூழல் பொறியாளர் தனது 25.7.2017 நாளிட்ட கடிதத்தில், தாங்கள் மேற்கொண்ட ஆய்வின் போது மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ள தொழிற்சாலைகள் குடியிருப்புப் பகுதியில் இயங்குவது அறியப்பட்டதாகவும், இது போன்று குடியிருப்புப் பகுதியில் செயல்படும் தொழிற்சாலைகள் / நிறுவனங்களுக்கு தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரிய இசைவாணை வழங்கப்படுவதில்லை எனவும், இது மாதிரி குடியிருப்புப் பகுதியில் செயல்படும் தொழிற்சாலைகள் மற்றும் வணிகம் தொடர்பான நிறுவனங்கள் குறித்தான புகார்கள் அனைத்தும் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகள் தங்களது உள்ளாட்சி அமைப்பின் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920 மற்றும் தமிழ்நாடு பொது சுகாதாரச் சட்டம், 1939-ன்படி உரிய நடவடிக்கை எடுத்தல் வேண்டும் என தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் 18.9.2014 நாளிட்ட சுற்றறிக்கையில் கூறப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். மேலும், மனுதாரரின் மனுவின் மீது நடவடிக்கை எடுத்து அதன் விவரத்தினை மனுதாரருக்கு தெரிவிக்கக் கோரி, கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையருக்கு அனுப்பியுள்ளார்.
- மனுதாரரின் மனு மீதும் மற்றும் சில குடியிருப்புவாசிகள் மனுக்கள் மீதும் 2011-ஆம் ஆண்டு முதலே மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் பொறியாளர் அக்குடியிருப்புப் பகுதியை ஆய்வு செய்து, குடியிருப்புப் பகுதியில் தொழில் நிறுவனங்கள் செயல்படுவதைக் கண்டறிந்து அவற்றின் மீது தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920, மற்றும் தமிழ்நாடு பொது சுகாதாரச் சட்டம், 1939-ன்படி உரிய நடவடிக்கை மேற்கொண்டு மாவட்ட ஆட்சியருக்கும், மாசு கட்டுப்பாட்டு வாரியத்திற்கும் மற்றும் மனுதாரருக்கும் மாநகராட்சி மேற்கொண்ட நடவடிக்கை குறித்து விவரத்தினை தெரிவிக்குமாறு கோரியுள்ளார். ஆனால், மாசு கட்டுப்பாட்டு வாரியம் கேட்டுக் கொண்டவாறு மாநகராட்சி அலுவலர்கள் நடவடிக்கை எதுவும் மேற்கொண்டதாகத் தெரியவில்லை.

**விரிவான விசாரணைக்குப் பின்னர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் பின்வருமாறு ஆணையிடுகிறது :**

Article 21 of the Constitution of India provides as follows :

**"Protection of life and personal liberty -**

No person shall be deprived of his life or personal liberty except according to procedure established by law."

மேலும், 1981–ஆம் ஆண்டின் கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டத்தில்

**360. Purposes for which places within the limits of the city may not be used without a licence.** – (1) No place within the limits of the city shall be used for any of the purposes mentioned in Schedule - IV without a licence obtained from the Commissioner and except in accordance with the conditions specified therein:

**364. Power of Commissioner to require owner or occupier of factory, etc., to discontinue the use of such factory, etc, -** Whenever it shall appear to the Commissioner that any factory, workshop or work-place or any building or any place in which, steam, water or other mechanical or electric power is employed is or is likely to become by reason of employment of such power or by noise or by any gas, vapour, smoke, vibration, dust, or other impurity generated in the course of the work carried on in such place or by any other cause, a nuisance or danger to the life, health or property of persons in the neighbourhood, he may, by written notice, require the owner or occupier of such factory, workshop, work-place, building or place to discontinue the use of such factory or place for any of the purposes that may be specified in such notice எனவும் கூறப்பட்டுள்ளது.

மேலும், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் உறுப்பு 21-ல் தூய்மையான தண்ணீர் மற்றும் தூய்மையான காற்று இரண்டும் ஒவ்வொரு குடிமகனின் அடிப்படை உரிமையாகும் என்று மாண்பமை உச்சநீதிமன்றம் தனது தீர்ப்புரைகளில், பின்வருமாறு குறிப்பிட்டுள்ளது :

**<u>Article 21 includes the right to a healthy environment -</u>**

The Supreme Court held that the right to life under Article 21 of the Constitution is a fundamental right and includes the rights to free water and free air from pollution for the full enjoyment of life. If anything endangers or impairs that quality of life in derogation of laws a citizen has recourse of Article 32 of the Consititution for removing the pollution of water or air which may be detrimental to life. The Court has stated that Article 21 includes the enjoyment of pollutant-free water and air for full enjoyment of life as far as the release of industrial pollution into rivers is concerned.

**<u>Right to Clean Environment</u>**

The Right to Life under Article 21 means a life of dignity to live in a proper environment free from the dangers of diseases and infection. Maintenance of health, preservation of the sanitation and environment have been held to fall within the purview of Article 21 as it adversely affects the life of the citizens and it amounts to slow poisoning and reducing the life of the citizens because of the hazards created if not checked .

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டல உதவி ஆணையரின் வாக்குமூலத்திலிருந்து, மனுதாரர் குறிப்பிடும் தொழிற்சாலைகள் குடியிருப்புப் பகுதியிலேயே மாநகராட்சியிடம் எந்தவொரு அனுமதியும் பெறாமல், கட்டடங்கள் கட்டப்பட்டு, தொழிற்சாலைகள் செயல்படுகின்றன என்பதும், அத்தொழிற்சாலைகளுக்கு குடியிருப்புப் பகுதிக்கான மதிப்பீட்டின்படியே சொத்து வரி வசூலிக்கப்படுகிறது என்பதும் மற்றும் 9.11.2020 மற்றும் 10.12.2020 ஆகிய நாட்களில் நான்கு தொழிற்சாலைகளுக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டு, அவற்றில் இரண்டு தொழிற்சாலைகள் மூடப்பட்டு, மற்ற இரண்டு தொழிற்சாலைகள் இன்றளவும் தொடர்ந்து இயங்குகின்றன என்பதும் அவற்றை மூடுவதற்கு தொடர் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை என்றும் தெரியவருகிறது.

மாசு கட்டுப்பாட்டு வாரியம் குடியிருப்புப் பகுதியில் இயங்கும் தொழிற்சாலைகளுக்கு இசைவாணை வழங்குவதில்லை என்று தெரிவித்து, அத்தொழிற்சாலைகளினால்

அக்குடியிருப்புகளில் வசிக்கும் மக்களுக்கு சுற்றுச்சூழல் பாதிக்கப்பட்டு அவர்களது சுகாதாரமும் பாதிக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டு, அத்தொழிற்சாலைகளை மூடுவதற்கு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920 மற்றும் தமிழ்நாடு பொது சுகாதாரச் சட்டம், 1939-ன்படி நடவடிக்கை எடுக்க கோயம்புத்தூர் மாநகராட்சியை கேட்டுக்கொண்டும், அத்தொழிற்சாலைகளை மூடுவதற்கு மேற்குறிப்பிட்டுள்ள சட்டப் பிரிவுகளின்படி நோட்டீஸ் மட்டும் கொடுத்துவிட்டு, அதன் பின்னர் எவ்வித தொடர் நடவடிக்கையும் மாநகராட்சி அலுவலர்கள் எடுக்காதது இம்முறைமன்றத்திற்குப் பெரும் அதிர்ச்சியை அளிக்கிறது. மேலும், மாநகராட்சி அலுவலர்களின் இச்செயல் வன்மையாக கண்டிக்கத்தக்கது என்பதை கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்றம் சுட்டிக் காட்டுகிறது.

குடியிருப்புப் பகுதிகளில் மாநகராட்சியின் அனுமதியின்றி கட்டடங்கள் கட்டி, தொழிற்சாலைகள் இயங்குவதையும் அவற்றினால் சுகாதார சீர்கேடுகள் ஏற்பட்டு கொடிய நோய்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளதை அறிந்தும், அத்தொழிற்சாலைகளை அடிக்கடி கண்காணித்து அவற்றை உடனுக்குடன் உயர் அலுவலர்களுக்கு தெரிவிக்க கள அலுவலர்களுக்கு அறிவுரைகள் வழங்கவும், அவ்வாறு செயல்படாத அனைத்து அலுவலர்கள் மீதும் நடைமுறையிலுள்ள சட்டப் பிரிவுகளின்கீழ் துறை ரீதியான கடும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அனைத்து உதவி ஆணையர்களுக்கும், சுகாதார அலுவலர்களுக்கும் சுற்றறிக்கை அனுப்ப வேண்டும் என கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

குடியிருப்புப் பகுதிகளில், மாநகராட்சியிடம் எந்த அனுமதியும் பெறாமல் கட்டடங்கள் கட்டி, அவற்றில் தொழிற்சாலைகள் தங்கு தடையின்றி இயங்குவதற்கும், அவற்றினால் காற்றுமாசு ஏற்பட்டு, நுரையீரல் புற்றுநோய் போன்ற சுகாதார சீர்கேடுகள் ஏற்படுவதற்கும், சொத்துவரி மதிப்பீட்டை தவறாக செய்ததற்கும் கோயம்புத்தூர் மாநகராட்சியின் மேற்கு மண்டல உதவி ஆணையர், பொது சுகாதார அலுவலர்கள், சொத்து வரி மதிப்பீட்டாளர்கள் ஆகிய அனைவரது ஒத்துழைப்பு இல்லாமல், அத்தொழிற்சாலைகள் இயங்குவதற்கு வாய்ப்பே இல்லை என்பதை இம்முறைமன்றம் கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையருக்கு சுட்டிக் காட்டுகிறது.

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டல உதவி ஆணையர், சம்பந்தப்பட்ட சுகாதார அலுவலர்கள், சொத்துவரி மதிப்பீட்டாளர் என அனைவரும் குடியிருப்புவாசிகளின் அடிப்படை உரிமைகளுக்கு மதிப்பளிக்காமல், இத்தொழிற்சாலைகள் இயங்குவதற்கு முழு அளவில் **உடந்தையாக செயல்பட்டு வருகின்றனர்** என்பதை எவ்வித சந்தேகத்திற்கும் இடமின்றி அறிய முடிகிறது. எனவே, கோயம்புத்தூர் மாநகராட்சியின் மேற்கு மண்டல உதவி ஆண்ணயர், சம்பந்தப்பட்ட பொது சுகாதார அலுவலர்கள் மற்றும் சொத்து வரி மதிப்பீட்டாளர்கள் ஆகியோரின் செயல்கள் தண்டனைக்குரியது. எனவே, இந்திய அரசியலமைப்புச் சட்டம் தனி மனிதனுக்கு வழங்கியுள்ள அடிப்படை உரிமைகளுக்கும் தமிழ்நாடு பொது சுகாதாரச் சட்டம், 1939-ன்படி செயல்படாத சம்பந்தப்பட்ட சுகாதார அலுவலர்கள் மற்றும் மாநகராட்சியிடம் உரிய கட்டட அனுமதி பெறாமல் கட்டப்பட்ட கட்டடங்களில் இயங்கும் தொழிற்சாலைக்கு குடியிருப்புப் பகுதிக்கான சொத்து வரியை மதிப்பீடு செய்த இவர்களை மேற்பார்வையிடும் கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டல உதவி ஆணையர், சொத்து வரி மதிப்பீட்டாளர்கள் ஆகியோரை நடைபெற்ற தவறுகளுக்கு பொறுப்பாக்கி அவர்கள் மீது நடைமுறையிலுள்ள சட்ட விதிகளின் கீழ் துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை எடுக்க கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்றம் பரிந்துரைத்து ஆணையிடுகிறது.

The lackadiscial and laid back attitude of the Zonal Officers of Coimbatore Corporation is severely censured. Their inaction, lethargy and chronic indifference have led to this health crisis and wanton law-breaking by the industrial units that are flouting the environmental rules and regulations besides defying Town and Country Planning directions. The DMA is directed to ensure that the Coimbatore Corporation behaves itself within the bounds of law and initiate action immediately. The delinquent officials involved in this grimy reality should be chargesheeted and punished suitably in order to instill a healthy fear in the minds of all field level functionaries.

இம்முறைமன்றத்தின் ஆணையில் கூறப்பட்டுள்ளவற்றின் மீது உரிய நடவடிக்கை மேற்கொண்டு அறிக்கை ஒன்றினை இம்முறைமன்றத்திற்கு ஒரு மாதத்திற்குள் சமர்ப்பிக்க கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

2022-ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 2-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புக்கள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. திரு. P. கனகாசலம்,
S/o. திரு. பழனிசாமி,
75, ஸ்ரீ முருகன் காலனி,
T.V.S. நகர், இடையர்பாளையம் (P.O.).
கோயம்புத்தூர் – 641 025.
2. ஆணையாளர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.
கோயம்புத்தூர். (பெயரிட்ட உறையில்)
3. உதவி ஆணையாளர்,
மேற்கு மண்டலம்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.
4. இணை இயக்குநர்
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028.

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

03/08/22

செயலாளர்.